RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1973

OPEN ACCESS

# புறநானூற்றில் சமண பௌத்த அறம்

செ. ஓவியம் [அ, *], கி. மைதிலி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620023, தமிழ்நாடு, இந்தியா

# Jain Buddhist Virtue in Purananuru

S. Oviyam [a, *], K. Mythili [a]

[a] Department of Tamil, Thantai Periyar Arts and Science College, (Autonomous), Tiruchirappalli-620023, Tamil Nadu, India.

* Corresponding Author: velauthamoviyam@gmail.com

Received: 12-07-2022
Revised: 28-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The Indian philosophy is based on the Vedas, and based on these Vedas, philosophies are divided into Vedic-accepting and Vedic-rejecting philosophies. These are called Vedic and Avedic philosophies respectively. It is a constant argument of scholars that Indian philosophies based on the Vedas are antiquated. Sangyam, Yogam, Nyayam, Vaisedigam, Purvamimamsa, Utiramimamsa, Buddhism, Jainism, Asivakam are the Avedic philosophies. This article is to find out how these anti-vedic philosophies and Jain Buddhist religious values have been influenced in purananuru.

**Keywords:** Purananuru, Vedic and Avedic, Vaisedigam, Buddhism, Jainism, Asivakam

## முன்னுரை

அவைதிகம் என்பது வேதங்கள் மற்றும் அவற்றின் பக்கவிளைவுகளான உபநிடதங்கள், புராணங்கள், மந்திர தந்திரங்கள் உள்ளிட்ட மூடநம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை மறுப்பது. சுருங்கச் சொன்னால் நாத்திகம் என்பதே அவைதிகம் எனப்படும். சமண, பௌத்த சமயங்கள் அவைதிகத்தைச் சார்ந்தது. இச்சமயங்கள் துறவையே முன்னிறுத்துவதாக உள்ளன. இளமை,யாக்கை, செல்வம் போன்ற நிலையாமை கருத்துகளையே வலியுறுத்துகின்றன.

## அவைதிகத்தின் மையக்கருத்துக்கள்

வேத வேள்விகளையும் வருணாசிரமங்களையும் பல கடவுள் வழிபாட்டையும் மறுத்தன. உடநிடதங்கள் உரைக்கும் ஒரு கடவுளுண்மை வாதத்தையும் உடன்படவில்லை. வேதங்கள் விளம்பும் இயற்கைச் சக்திகளுக்கும் உடநிடதங்கள் உரைக்கும் பரம்பொருளுக்கும் பதிலாக அண்ட அமைப்பியல் நியதிகளை வரையறுத்தன.

அண்டத்தில் இயற்கைவிதியின் ஆட்சியை மதித்தன. உடன்பாட்டு முறையில் நோக்கினால் அவைதிக அல்லது நாத்திகத் தத்துவங்கள் அமைப்பியல் நியதிகளை வரையறுத்தன. அண்டங்களின் இயற்கை ஆட்சியை மதித்தன. செயற்கையாக முன்வைக்கப்பட்ட கடவுள், இயற்கைக் கடந்த ஆற்றல்

இன்னபிறவற்றை அவை ஏற்கமறுத்தன. அவைதிகத்தின் வினைக்கொள்கை, துறவு, நிலையாமை, வடக்கிருத்தல் போன்ற அறங்களை இலக்கியங்களில் காணஇயலும்.

## சமண பௌத்த வினைக்கோட்பாடு

பிறப்புக்கள் பல; உயிர் ஒன்றே. பிறப்புக்களும் உடல்களும் மாறும்; அவற்றின் ஊடே பயணம்புரியும் உயிர் மாறாது. அழியாது. அனந்தகோடி உயிர்கள் இவ்வுலகில் அனந்தகோடிப் பிறப்புகளில் பிறந்துபிறந்து அவற்றின் நல்வினை - தீவினை அல்லது புண்ணியம் பாவம் ஆகியவற்றினால் விளையும் பயன்களை அனுபவிக்கின்றன. இத்துக்கங்கள் தீர வினைகள் தீர வேண்டும். நிர்வாணம் அல்லது சூனியநிலை அடைய வேண்டும். இதற்குப் பொறுப்பு அந்தந்த ஆன்மாக்களே, உயிர்களே என்று சமணமும் பௌத்தமும் கூறுகின்றன.

## மறுபிறப்புக் கொள்கை

பௌத்த சஷயவாதக் கொள்கைப்படி இக்கணத்தில் இருப்பது மறுகணத்தில் அப்படியே இருப்பதில்லை. கணம்தோறும் எல்லாமே மாறிக்கொண்டிருக்கிறது. தோற்றம் - வளர்ச்சி மாற்றம் - மறைவு என்ற சுழற்சிக்கு அப்பால் ஏதுமில்லை. முதலும் ஊதியமும் வணிகத்தின் அடிப்படை. முதல்போட்டால் அதற்குரிய ஊதியம் வரும். வினைக்கு ஏற்பப்பிறவி கிட்டும் என்பது வினைக்கொள்கை. இது வைதிகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, வேளாண்மைச் சிந்தனையிலும் பரவியது. விதைக்கு ஏற்ற விளைச்சல் கிடைக்கும். நிலம் எதுவானாலும் விதைத்த விதைதான் முளைக்கும். நிலத்தைவிட விதைக்கு முக்கியத்துவம் ஏற்பட்டது உடைமைக்கால நாகரிகத்திலாகும். விதை வினைக்கும் நிலங்கள் பிறப்புக்களுக்கும் உவமைகளாயின.

இளமை, செல்வம், உடல், இந்த வாழ்க்கையாவும் நிலையில்லாதவை. தோன்றி வளர்ந்து மறைபவை மீண்டும்மீண்டும் தோன்றி வளர்ந்து மறைபவை. இந்த மாறாத சுழற்சியின் துக்கத்திலிருந்து உயிர்கள் விடுதலை பெறுவது, வீடுபேறடைவது அவற்றின் சொந்தமுயற்சி, விடாமுயற்சியில் உள்ளது என்று கூறியவை சமணமும் பௌத்தமும்.

## புறநானூற்றில் வினைக்கோட்பாடு

வினைக்கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தியல் ஊழ்வினையாகும். ஊழ்வினை என்பது இலக்கணப்படி குறிப்பிட்ட ஒருகாலங்காட்டாத வினைச்சொல்லும், பெயர்ச்சொல்லும் தொகுத்துவரும் வினைத்தொகையாகும். மூன்று காலங்களுக்கும் விரித்துக்கொள்ளலாம். ஊழ்த்தவினை, ஊழ்கின்றவினை, ஊழ்க்கும்வினை எனப் பெயரெச்சங்களாக்கிக் கொள்ளலாம். ஊழ்த்தல் என்றால் உரிய காலத்தில் கனிதல், பழுத்தல் எனப்பொருள். இப்பிறப்பிலும், முற்பிறப்புகளிலும் ஒருவர் செய்த நல்ல தீயவினைகள் அவையவற்றுக்குரிய காலத்தில் ஊழ்த்துப் பயனை விளைவிக்கின்றன. இன்பம், துன்பம் என்று இப்பிறவியில் ஒருவர் அனுபவிப்பதற்கும் இனிவரும் பிறவியைத் தீர்மானிப்பதற்கும் வினைகளே காரணம்.

இவ்வினைகளுக்கும், விளைவுகளுக்கும் அவரவரே பொறுப்பு என்பது சமணசமயத்தின் அழுத்தமான நம்பிக்கையாகும். பிற சமயச்சான்றோர் இறைவன் அருளால் வினையைப் போக்கிக்கொள்ளலாம் என்பர். பிராயச்சித்தம், கழுவாய் ஆகியவற்றைச் செய்வதின் மூலமாகவும் வினைப்பயனிலிருந்து தப்பிக்க முடியும் என்பர்.

ஆனால், சமணமோ, வினையின் பயனை ஒருபிறவியில் மட்டுமன்றி வரும் பிறவிகள்தோறும் அனுபவித்தேயாக வேண்டும் என்று கூறுகிறது. இந்த ஊழ்வினைப் பற்றிய விளக்கத்தைக் கணியன்பூங்குன்றனாரின் பாடலில் காணலாம்.

“நீர்வழிப் படூஉம் புனைபோல் ஆருயிர்

முறைவழிப் படூஉம் என்பது திறவோர்

காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்

பெரியோரை வியத்தலும் இலமே

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

இப்பாடலில் மானிடவாழ்வில் கண்கூடாகக் காணக்கூடிய இன்பம், துன்பம், நல்லது, தீயது, பிறப்பு, இறப்பு, பெரியவன், தாழ்ந்தவன் என்கின்ற எதிர்மறை இணைகளின் முரண்பட்ட அனுபவங்களுக்கு மற்றவர்கள் காரணமில்லை. அவரவரின் ஊழ்வினைப் பயன்தான் காரணம் (Balasubramanian, 2004). எனவே, துன்பம் கண்டு துயர்அடைவதும் இல்லை. இன்பம் கண்டு மகிழ்வதும் தேவையில்லை. இதனை மாற்றமுடியாது. அனுபவித்தே தீரவேண்டும் என்ற சமண பௌத்த வினை - வினைப்பயன் பற்றிய விதி வாதக்கருத்து மிக எளிமையாகக் கூறப்பட்டுள்ளது.

“சமண சமயத்தத்துவத்திலே அநுபிரேக்ஷை அல்லது ஆழ்ந்து தியானித்தல் என்றொன்றுண்டு. உண்மையை அறிந்துகொள்ள இது ஏதுவாகும். உலகம் நிலையற்றது; ஊழ்வினைப்பயனை அனுபவித்து அறுத்திடுதல் வீடாகும். நமது செய்கைகளும் அவற்றினால் இம்மையிலும் மறுமையிலும் வரும் இன்பதுன்பங்களுக்கும் நாமே பொறுப்பாளிகள். பொருள்களின் உண்மையை அறிந்துகொள்வது நன்ஞானம். இவ்வாறெல்லாம் மனத்திற் கொண்டொழுகுவதற்குத் தியானம் அத்தியாவசியமாகும்” (Kailasapathy, 1996).

இதுவே, பூங்குன்றனாரின் செய்யுளின் உள்ளீடு என்பது எளிதிற்புலனாகும். இதேகருத்தினைச் சீவகசிந்தாமணியின் ஆசிரியர், நாமகள் இலம்பத்திலே,

“சாதலும் பிறத்த றானுந் தம்வினைப் பயத்தினாகும்

ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்

நோதலும் பரிவுமெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே

பேதைநீ பெரிதும் பொல்லாப் பெய்வளைத் தோளியென்றான்”

என்று சச்சந்தன் கூற்றாகவரும் கருத்துகள் நோக்கத்தக்கவை (Balasubramanian, 2004). வினையின் பயனால் நேரும் இறப்பும், பிறப்பும் ஆக்கமும், அழிவும் ஆகிய யாவும் பொருள்களுக்கு இயற்கை. இவற்றுள் சாதல் முதலியவற்றிற்குத் துன்புறுதலும், பிறத்தல் முதலியவற்றிற்கு இன்புறுதலுமாகிய செய்கையெல்லாம் அறிவின்மையே என்று கூறியுள்ளதிலிருந்து இது சமணசமயத் தத்துவம் என்பது தெள்ளிதில் விளங்கும்.

## புறநானூற்றில் சஷயவாதக்கொள்கை

பௌத்தர்கள் வைதிகத்திற்கு முரண்பட்ட என்றும் நிலைப்பதான பிரம்மம், ஆன்மா போன்றவை இல்லை என்ற அனாத்மத் கொள்கை என்ற கருத்தை உருவாக்கினர். அதாவது பிரம்மம், ஆன்மா என்று நிலையானதொன்றும் இல்லை. மாறுதல் ஒன்றே நிலையானது அந்த நிலையும் ஒரு கணத்திற்குமேல் நிலைக்காது நீரோடையில் ஒரு குமிழியில் நாம் காணும் நீர் முந்தைய நீர்க்குமிழ் அன்று; சுவாலையில் ஒருதுளியில் காண்பது முந்தைய கணத்தில் நாம் கண்டதுளியன்று; கனந்தோறும் மாறிக்கொண்டேயிருப்பது. இதற்கு சஷயவாதம் என்று பெயர். இக்கொள்கை புறநானூற்றில் முதுகண்ணன் சாத்தனார் பாடலில் வெளிப்பட்டுள்ளது. சோழன் நலங்கிள்ளிக்கு நிலவைச் சான்றாகக்காட்டி நிலையாமையை உணர்த்துகிறார்.

“தேய்தல் உண்மையும் பெருக லுண்மையும்

மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்

அறியா தோறையும் அறியக் காட்டி

திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து”

இவ்வடிகளில் மூலம் வளர்ந்த ஒன்று பின் குறைதலும், குறைந்த ஒன்று பின் வளர்தலும், பிறந்த ஒன்று பின் இறத்தலும், இறந்த ஒன்று பின் பிறத்தலும் ஆகிய இவ்வுண்மைகளைக் கல்வியறிவு இல்லாதவரையும் அறியுமாறு செய்து நிலையாமை கருத்தை முன்வைக்கின்றது (Ilampurnaar, 2016).

## நிலையாமை என்னும் கருத்தாக்கம்

நிலையாமை என்பது நிலைத்து நில்லாததோடு இளமை, செல்வம், யாக்கை ஆகிய யாவும் மாற்றங்களுக்கு உட்பட்டு அழியக் கூடியவையாகும். நிலையாமை ஒன்றுமட்டுமே நிலைத்துநிற்கும் தன்மையுடையது. “நிலையாமையே நிலையான உண்மை என்று கௌதமபுத்தரும் வாழ்க்கையானது நில்லாது ஓடும் தொடர் நீரோட்டம் போன்றது” என்று கிரேக்கஞானி அனாக்கிமேனிடரும் கூறுகின்றார். இக்கருத்தைக் காரல்மார்க்ஸ், மாற்றம் என்பது மட்டுமே மாறாதது என்று கூறினார். தொல்காப்பியர் நிலையாமையைப் பற்றிக் கூறும்பொழுது,

“பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்

நில்லா உலகம் புல்லிய நெறித்தே”

என்று குறிப்பிடுகின்றார் (Balasubramanian, 2004). இதே போன்று சங்க இலக்கிய நூலான புறநானூறு,

“மன்னா உலகத்து மண்ணுதல் குறித்தோர்

தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே”

என்றும் இதே போன்று

“நில்லாமையே நிலையிற்று ஆகலின்

நல்இசை வேட்ட நயனுடை நெஞ்சிற்

கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்

தங்குதற் குரிய தன்று”

என்று குறுந்தொகைப் பாடலும் நிலையாமை கருத்துக்களை மக்களுக்கு அறிவுறுத்தி அவர்களை நல்வழிப்படுத்துகின்றன (Gowmareeshwari, 2006). மேலும், நிலையாமை கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்கூறுவதில் காப்பியங்கள் தன்னிகரற்று விளங்குகின்றன. அவற்றுள் குறிப்பாக ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசி,

“பாளையாற் தன்மை செத்தும் பாலனாந் தன்மை செத்தும்

காளையாற் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்

மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரும் மூப்புமாகி

நாளுநாட் சாகின்றோமால் நமக்குநா மழாத தென்னை”

என்ற பாடலின் வாயிலாக மனிதன், குழந்தை முதல் முதியவர் வரையிலான எல்லாப் பருவமும் நிலையில்லாது மாறிக்கொண்டேபோய் இறுதியில் உயிரும் நிலையில்லாது மறைந்து போகின்றான் என்பதைத் தெளிவுபட விளக்கிக்கூறுகின்றது (Raj Gowthaman, 2006).

## புறப்பாடல்களில் நிலையாமைக் கருத்துகள்

யாக்கை, செல்வம், இளமை ஆகிய மூன்றும் மனித வாழ்வில் நிலையில்லாதவையாகக் கூறப்படுகின்றன. யாக்கையின் மூலம் பெறப்படுவது அறம். செல்வத்தால் எய்யவேண்டியது புகழ்;

இளமையால் நுகரப்படுவது இன்பம்; என்ற அடிப்படையில் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்கள் முதன்மைப்படுத்தப்பட்டன. யாக்கை, செல்வம், இளமை ஆகிய இவற்றின் நிலையற்ற பண்பை நிலைத்ததாக ஆக்கும் முயற்சி சங்க காலத்திலேயே தொடங்கிவிட்டது. இக்கருத்துக்கு அரணாகக் கஸ்தூரி அவர்கள் 'தமிழ் இலக்கியங்களில் நிலையாமை' என்ற தமது நூலில் "நோய்வாய்ப்படின் இளமை அழிந்து யாக்கை தளர நேரிடும்" என்றுயாக்கை, செல்வம், இளமை இவைகளுக்கு நிரலாகக்கொண்டு பொருள் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். புறப்பாடல்களில் நிலையாமை பற்றிய கருத்து காஞ்சித் திணைப்பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் புலவர்கள் ஆள்வோரிடம் வாழ்வாங்கு வாழும் நோக்கத்திற்காக நேரடியாக நிலையாமை கருத்தை எடுத்துரைப்பதைக் காணலாம்.

"ஈயல் போல ஒருபகல் வாழ்க்கை" (Gowmareeshwari, 2006)

என வாழ்நாள் நிலையாமையையும்,

"கவறு பெயர்த்தன்ன நில்லாவாழ்க்கை இட்டு

அகறல் ஓம்புமின் அறிவுடையீர் எனக்

கையறத் துறப்போர் கழறுவ"

சூதாட்டக்காய் உருண்டு பெயர்ந்து மாறுவது போல வாழ்க்கை நிலையற்றது. இதனை, உணர்ந்த அறிவுடையோர் முற்றிலுமாகத் துறந்துவிடுவார்கள் (Gowmareeshwari, 2006). மற்றொரு புலவர், இளமை, செல்வம் ஆகியவை நிலையற்றவை இவற்றை நுகர்ந்தால் வினைகள் தோன்றும். இவ்வினைகள் ஒருவருடைய கால்களைக் கண்டிப்பாக இடறி வீழ்த்திவிடும் என்ற பொருள்படும்படியாக,

"அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்

ஒருவன் ஆட்டும் புல்வாய் போல

ஓடி உய்தலும் கூடும்மன்

ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே"

என்று ஒரேருழவர் பாடியுள்ளார் (Balasubramanian, 2004).

## வாழ்க்கை நிலையாமை

பக்குடுக்கை நன்கணியனாரின் புறப்பாடலில் வாழ்க்கை நிலையாமையும் (இறப்பு) வாழ்க்கை நுகர்வும்(இன்பம்) முரண்நிலையில் ஒப்பிடப்பட்டு வாழும் நெறி முன்வைக்கப்படுகிறது.

"ஓரில் நெய்தல் கறங்க ஓரில்

ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப

புணர்ந்தோர் பூஅணிஅணிய, பிறிந்தோர்

பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப

படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்"

ஒருவீட்டில் சாப்பறை ஒலிக்க அங்கே மாந்தர் கண்ணீரும் கம்பலையுமாக இருக்க, இன்னொரு வீட்டில் மணப்பாறை முழங்க அங்கே மாலையும் கழுத்துமாக மணமக்கள் இனிதே இருக்கின்றார்கள். இப்படி முரண்பட்ட உலகைப் படைத்த அந்த இறைவன் பண்பு இல்லாதவன். இந்த உலகவாழ்க்கை இனிமையற்றது (Gowmareeshwari, 2006). அதனால் இதன் இயல்பை உணர்ந்தவர்கள் இவ்வுலக வாழ்வின் இனிய பகுதிகளை மட்டும் காண்பார்களாக.

இங்கே நிலையாமை வாழ்க்கை மறுப்புக்கு இட்டுச்செல்லாது வாழ்வதற்கான நியாயங்கள் இருப்பதை நினைவூட்டுகிறது. பிறப்பு, இறப்பு என்கிற எல்லைக்கு உட்பட்ட மானிடவாழ்க்கை

நிலையில்லாதது, இனிமையற்றது. இத்தகைய வாழ்க்கையின் பேரில் உண்டாகிற சலிப்பு இயற்கையானது போல இப்பாடலில் கூறப்படுகிறது. ஆனால் இச்சலிப்பு இயற்கையன்று. இது மனிதரின் விடாமுயற்சியின் இடையிடையே வருகிற பின்னடைவாகும். இச்சலிப்பை அகற்றத் தூண்டுவதே நிலையாமையின் பயன் எனத்தெரிகிறது.

மேலும், இப்பாடலில் முரண்பட்ட உலகத்தைப் படைத்த கடவுள் பண்பில்லாதவன் என உலகைப் பழிப்பது போன்று பாடியுள்ளார். இக்கருத்தானது சமண சமயத்தில் படைப்புக்கடவுள் பற்றிய சிந்தனை இல்லை என்பதை வலியுறுத்துவதாக உள்ளது.

## அல்லது செய்தல் ஓம்புமின்

இறப்பு உணர்த்திய நிலையாமை உடைமைச் சமூகத்தில் சேர்த்து வைத்தல், நிலைபேறு அடைதல் என்ற ரீதியில் மாந்தரை ஊக்கிவிட்டது. முதுமையும் இறப்பும் மனிதரை, குறிப்பாகச் சங்க காலத் தமிழரைத் துறவுக்கும் நம்பிக்கையின்மைக்கும் செலுத்தவில்லை. சாவதற்குள் முடிந்த அளவு நல்லதைச் செய்துவிட்டுப் போகலாம் என்ற நேர்மறை எண்ணத்தை ஏற்படுத்தின. அதனை வெளிப்படுத்தும் விதமாக,

“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்

எல்லாரும் உவப்பது அன்றியும்

நல்லாற்றுப் படுஉம் நெறியுமார் அதுவே”

என்ற புறநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் புலவர் முதுமையையும் சாவையும் முன்னிறுத்தி வாழ்வில் செயல்படுவதற்கான ஊக்கத்தை முன்மொழிகிறார் (Balasubramanian, 2004).

## நிலையாமையில் ஈகையறம்

காஞ்சித் திணையில் வருகின்ற பெருங்காஞ்சித்துறைப் பாடல்கள் அரசர்களுக்கு ஈமப் புறங்காட்டைச் (இறப்பு) சுட்டிக்காட்டிச் சாவை வெல்லும் வழியைக் கூறுகின்றன. “சாவை வெல்லும் முயற்சி பூர்வகுடிகளிலிருந்தே தொடங்கிவிட்டது. பெருங்கற்கல்லறைகள், நெடுங்கற்கள் (Menbir) நடுகற்கள் (hero stones), பதுக்கைகள், ஈமத்தாழிகள் ஆகியவற்றிலிருந்து இம்முயற்சியினை அடையாளம் காணலாம். புலவர் மரபானது சாவை வெல்லுவதற்குக் கற்கல்லறைகளையும், நினைவுச்சின்னங்களையும் விடப் போற்றிப்பாடல்கள் சிறந்தவை என்பதை நிலைநாட்டியது (Mailai Seeni Venkatasamy, 2018).”

நீடித்த வாழ்க்கையை ஒருவனது இறப்பிற்குப்பின் அவனைப் பற்றிய சமூகமரியாதையும், புகழும் தருகின்றன. அரசன் தனது அளப்பெருஞ்செல்வ உடைமையைப் பிறர்க்கு ஈகை வழியே வழங்குவது அவனுக்கு நிலைபேறு வழங்கும் செயலாகக் கருதப்பட்டது. ஈகையைத்தான் புலவர் மரபு புகழ் ஈட்டும் அறச்செயலாகப் போற்றியது. இதனைப் பற்றி அறிய பின்வரும் பெருங்காஞ்சித்துறைப் பாடல் உதவும்.

“இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது

கொள்என விடுவை ஆயின் வெள்ளென

ஆண்டுநி பெயர்ந்த பின்னும்

ஈண்டு நீ விளங்கும் நீ எய்திய புகழே”

எத்தனையோ அரசர்கள் இதற்குமுன் நாடாண்டு காடுபோய் அடங்கிவிட்டார்கள் (Balasubramanian, 2004). இறப்பு அனைவருக்கும் வரும். இறந்தபின் நிற்கப்போவது ஒருவனைப்பற்றிய இசையும் (புகழ்)

வசையும் (பழி) ஆகும். வசைநீங்கி இசையோடு இறந்தபின்னும் ஒருவன் வாழவேண்டும் என்றால் ஈகை புரிதல்வேண்டும். ஆயுளும் செல்வமும் நிலைக்காது. எனவே, வாழ்கின்ற காலத்தில் தேடிய செல்வத்தை வைத்து நிலைத்த பெயரை எடுக்கவேண்டும் எனப்புலவர் மரபு திரும்பத்திரும்ப உடையவர்களுக்குப் போதித்தது.

## செல்வம் யாக்கை நிலையாமையில் ஈகையும் புகழும்

இரப்போர்க்கு இல்லை என்னாது ஈயவும், தளர்ந்துபோன உறவினர், சுற்றத்தார், நண்பர் ஆகியோரை மீண்டும் வலிமையுறச் செய்வதற்கும், மேலெழுந்து கொண்டிருக்கும் பகைவரது உயர்ச்சியைக் குன்றச்செய்வதற்கும், இரப்போரின் துயரம் தீர்க்கவும் பொருள் இன்றியமையாததாய் இருந்தது. இதனை நோக்கியே உடைமைச்சமூகம் பொருள் ஈட்டுவதிலும் பெறுவதிலும் பெரும்பங்கு வகித்தன. பொருள் ஈட்டல், கொடை போன்றவை ஆண்களை மையமிட்டதாகவே அமைகின்றன. இவ்வாறு வாழ்வின் எல்லாநிலைகளிலும் இன்றியாமையாத செல்வத்தினை, நிலையில்லாதது என உணர்த்தி அதன்மூலம் ஈகை அறத்தை வலியுறுத்துகிறார் சங்கவருணர் என்னும் புலவர்.

"அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது

இன்னும் அற்று அதன் பண்பே அதனால்

நிச்சமும் ஒழுக்கமும் முச்சிலை பரிசில்

நச்சோர் கையின் நிரப்பல் ஓம்புமதி"

என்று தந்துமாறனுக்குச் சங்க வருணர் என்னும் நாகரையர் அறவுரை பகர்கிறார். ஈகை என்னும் அறச்செயல் ஒருவனுடைய உடைமையை அறத்தகுதி பெற்றதாகச் செய்கிறது. அவனுக்குப்பின் அவன் புகழுக்குக் காரணமாகிறது (Gowmareeshwari, 2006).

### காடுவாழ்த்தில் நிலையாமை

காஞ்சித் திணையில் காடுவாழ்த்துத் துறையில் கதையன் கண்ணனாரால் பாடப்பெற்ற பாடலில் நிலையாமை தத்துவம் முழுவதும் பொதிந்துள்ளது. யாக்கையால் இளமையும் செல்வமும் பெறலாம். எனினும் அந்த யாக்கையையும் இறுதியில் ஈமப்புறங்காட்டையே அடையும். உலகில் யாதொன்றும் நிலையில்லை என்பதை வலியுறுத்தவே இப்பாடல் இடம்பெற்றிருக்கிறது. வேந்தரையும் வள்ளளையும் புகழும் மேன்மையையும் உடையோரை வாழ்த்தும் புறநூலில் காடுவாழ்த்து இடம்பெற்றிருப்பது அக்காலச்சூழலில் தமிழ்கூறும்நல்லுலகம் நிலையாமை கருத்தையும் அறிந்திருந்ததே ஆகும்.

"எல்லாப் புறனும் தாங்கண்டு லகத்து

மண்பதைக் கெல்லாம் தானாய்

தன்புறங் காண்போர் காண்பறியாதே"

எல்லோருடைய முதுகையும் தான்கண்டு எத்தகைய மக்களுக்கும் தானே முடிவிடமாய்த் தனிநின்று முதுகாடு விளங்குகின்றது (Gowmareeshwari, 2006). இம்முதுகாட்டின் புறங்காண்போர் ஒருவரும் இலர். இக்காடுதானும், தன்முதுகு காண்பாரை இதுவரைக் கண்டதில்லை என்று சுடுகாட்டைப் பொருளாகக் கொண்டு உயிர்வாழ்க்கையின் நிலையா இயல்பை இப்பாடல் கூறுகிறது.

உலக நிலையாமையை உணர்த்தி இவ்வுலகில் வாழ்வது சிறிது காலமேதான். அதற்கு ஏன் மற்றோரை இழித்தும் அழித்தும் துன்புறுத்தியும் பிறர் உடைமையைக் கவர்ந்தும் வாழ வேண்டும்? தனது வெற்றி ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாது, தன்னலத்தை மட்டும் பாராது, மனிதன் மனித மதிப்புகளை உணர்ந்து வாழவேண்டும் என்பதை வலியுறுத்தவே புலவர் சுடுகாட்டை வாழ்த்திப் பாடுகிறார். யார் யாரை வென்றாலும் சுடுகாட்டை யாரும் வென்றதில்லை என்பதை இயம்பி, நில்லா

உலகின் நிலையாமை கூறி, அனைவருக்கும் பயன்படும் நல்வாழ்க்கையை வாழ்க என்ற வாழ்வியல் தத்துவத்தை எடுத்துரைப்பதாக இப்பாடல் அமைகிறது.

## நிலமகளை முன்னிறுத்தி நிலையாமை

பண்டைய இலக்கியங்களில் பரத்தையர் என்போர் இயல்பான பெண்ணுக்கு மாறுபட்ட வாழ்க்கை முறைகளையும் அறங்களையும் கொண்ட பெண்களாகத் தமிழ் இலக்கிய மரபில் பரத்தை, பொதுமகள், கணிகை, வரைவின்மகளிர், வேசை, தாசி என்ற பெயர்களால் முத்திரையிடப்பட்டுள்ளார்கள். திருமணம், குடும்பம், புதல்வர்ப்பேறு, பதிவிரதா தருமம் ஆகியவற்றிலிருந்து அப்பாற்பட்டுப் பொருளீட்டல், காமக்களையின் தருமம், குலம் மற்றும் உலக விவகார அறிவு ஆகியவற்றிற்குரியவர்களாக இவற்றையே ஒட்டுமொத்த வாழ்க்கையாக ஏற்றவர்கள்.

“திருமணத்தை உருவாக்கிய ஆண்களே பரத்தமை நிறுவனத்தையும் உண்டாக்கினார்கள். பிறப்பாலும் இடையிலும் விலைமாதர்கள் தோன்றுகிறார்கள்” என்ற ராஜ் கௌதமன் கூற்று பரத்தையின் தோற்றத்தை விளக்கும் முகமாக உள்ளது (Raj Gowthaman, 2006). விலைதரும் ஆணின் பொருள் மற்றும் அதிகார உடைமைகள் இருக்கும்வரை அவர்கள் ஆண்களின் உடைமைகளாகவும், ஆண்களின் உடைமைகளைச் சார்ந்தவர்களாகவும், கருதப்பட்டனர். இத்தகைய பரத்தமையானது சங்க அகப்பாடல்களில் மருதத்திணையில் இடம்பெற்றிருந்தன. அக்காலச்சூழலில் பரத்தமை ஒழுக்கத்தை அச்சமூகம் கண்டிக்கவில்லை. ஆனால், புறப்பாட்டில் காஞ்சித்திணையில் பெருங்காஞ்சித்துறையில் நிலையாமை கருத்தாக வரும்போது மார்கண்டேயனார் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டிக்கிறார்.

விலைமகளிர் பொருளுடையோரைச் சென்றுசேருவது போல விசும்பை முகனாகவும், இருசுடர்களைக் கண்ணாகவும் உடைய நிலமகள் வலியும் சூழ்ச்சியும் உடைய வேந்தர்பால் தங்குவாள். வலியுடைய வேந்தர் இறப்ப, தான்மட்டும் நிலையாக இருக்கிறேன் என்று நிலமகள் புலம்புவதாக,

“விலைநலப் பெண்டிரின் பலர்மீக் கூற

உள்ளேன் வாழீயர், யான்என பல்மான்

நிலமகள் அழுத காஞ்சியும்

உண்டுஎன உரைப்பாரால் உணர்த்திசி னோரே”

என்று ஆசிரியர் விளக்குகிறார். அகப்பாடல்களில் கடியப்படாத பரத்தமை ஒழுக்கம், புறப்பாடல்களில் கடியப்படுவதற்குக் காரணம் சமயத் தாக்கமே ஆகும். பௌத்த சமண சமயங்களில் ‘பிறன்மனை விரும்பாமை’ என்னும் ஒழுக்கமே பரத்தமை எதிர்ப்புக்குக் காரணமாக அமைந்தது (Thiruthakka Devar, 2020).

## வடக்கிருத்தல் என்னும் சல்லேகனை

வைதிக சமயத்தின் செல்வாக்கு அரசர்களிடம் இருந்ததைப் போலச் சமணசமயச் செல்வாக்கும் சில அரசர்களிடம் இருந்ததைக் காணமுடிகிறது. சங்க காலத் தொடக்கநிலையின் இறுதிப்பகுதியில் முன்பழந்தமிழ்க் கால இறுதிப்பகுதியில் வாழ்ந்த கோப்பெருஞ்சோழன் பற்றிய பாடல்களை இதற்குச் சான்றாகக் காட்டலாம். புறநானூற்றுப் பாடல்களில் (212 - 213) இம்மன்னன் வடக்கிருந்து உயிர்துறந்த செய்தி பாடப்பட்டுள்ளது. வடக்கிருத்தல் என்பது சமண சமயநெறி. இது சல்லேகனை எனப்பெறும். “வடக்கிருத்தல் அல்லது சல்லேகனை என்பது சமண சமயக் கொள்கையாகும். உண்ணாநோன்பிருந்து உயிர்விடுவது என்பது இதன்பொருள். “பொறுக்க முடியாத மனவேதனையைத் தருகின்ற இடையூறு, தீராதநோய், மிகுந்தமூப்பு இவை உண்டான காலத்துச் சல்லேகனை செய்து உயிர்விடலாம் என்பது சமணக்கொள்கை. சல்லேகனை செய்வோர் தருப்பைப்புல்லின் மேல் வடக்கு நோக்கி அமர்ந்து சாகின்ற வரையில் உணவுகொள்ளாமல் இருக்க வேண்டும்” என்னும் மயிலை சீனி வேங்கடசாமியின் கருத்து

சங்ககால அரசர் சிலர் கைக்கொண்ட வடக்கிருத்தல் என்னும் மரபின் சமண சமயப் பின்னணியைக் காட்டுகிறது (Gowmareeshwari, 2006).

இந்நெறி கரிகாலனை எதிர்த்துப் போரிட்டுப் புறப்புண்பட்ட சேரமான் பெருஞ்சேரலாதனாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது (புறம். 65; 66) இவ்வாறு இவ்விருமன்னரும் வடக்கிருந்ததனால் இவர்கள் சமணசமய நெறியைக் கைக்கொண்டவர்களாய் இருந்துள்ளனர் எனத் துணியலாம். எனவே, சங்க கால இறுதியில் சமண மதம் அரசர் ஆதரவுடன் செல்வாக்குப் பெற்ற சமயமாய் இருந்துள்ளமை இதனால் தெளிவாகின்றனது.

## முடிவுரை

கடவுள், இயற்கை கடந்த ஆற்றல் இன்ன பிறவற்றை சமண பௌத்த சமயங்கள் ஏற்க மறுத்தன. உயிர்கள் கணந்தோறும் மாறுதலுக்கு உட்படும். இன்பம், துன்பம் என்று இப்பிறவியில் ஒருவர் அனுபவிப்பதற்கும் இனிவரும் பிறவிகளைத் தீர்மானிப்பதற்கும் வினைகளே காரணம். இவ்வினைகளுக்கும் விளைவுகளுக்கும் அவர்அவரே பொறுப்பு. இளமை, செல்வம், யாக்கை போன்றவை நிலையில்லாதவை. புறப்பாடல்களில் நிலையாமை பற்றிய கருத்து காஞ்சித்திணைப் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. நிலையாமையை வலியுறுத்தி மன்னனுக்குச் சமூக மரியாதையும் புகழும் தருவது அவனின் ஈகையறமே. ஈகையே ஒருவனுக்கு நிலைபேறு வழங்கும் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது. யார் யாரை வென்றாலும் இறுதியில் சுடுகாட்டை வென்றவர் யாரும் இல்லை என்று காடுவாழ்த்தில் நிலையாமையைக் கூறி அனைவருக்கும் பயன்படும் நல்வாழ்க்கை வாழும்படி உணர்த்தப்பட்டது. சமண சமயத்திற்கே உரித்தான சல்லேகனை என்னும் வடக்கிருத்தல், கோப்பெருஞ்சோழனாலும், கரிகாலனை எதிர்த்துப் போரிட்ட பெருஞ்சேரல் இரும்பொறையாலும் பின்பற்றப்பட்டுள்ளது.

## References

Balasubramanian, K, V. (2004) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Gowmareeshwari, S. (2006) Pathenen Keelkanaku, saratha pathippagam, Chennai, India.

Kailasapathy, (1966) pandai tamilar valvum valipadum, Paari Nilaiyam, Chennai, India.

Mailai Seeni Venkatasamy, (2018) Samanamum Tamilum, Naam Thamizhar Pathippagam, Chennai, India.

Raj Gowthaman, (2006) Tamil Samoogathil Aramum aatralum, Tamizhini, Chennai, India.

Thiruthakka Devar, (2020) Seevaka Sinthamani Mulamum Uraium, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License